**இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் தேசிய நெடுஞ்சாலைகள் விரிவாக்கத் திட்டத்தின் 10000 கி.மீ. (தே.நெ.மு.தி-நிலைIII) திட்ட தொகுப்பு IIன் கீழ் நாகர்கோவில் - காவல்கிணறு (கி.மீ. 0.000 முதல் 16.400) வரையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 47-பி உட்பட, தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களிலுள்ள திருவனந்தபுரம் - கன்னியாகுமரி (கி.மீ. 43.000 முதல் 99.000) வரையிலுள்ள தே.நெ.47-னை 4/6 வழிசாலையாக மாற்றுதல் சம்பந்தமாக நாஞ்சில் அரங்கம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், நாகர்கோவிலில் 21.08.2009 அன்று காலை 10.00 மணி அளவில் நடத்தப் பெற்ற மக்கள் கேட்புரை கூட்டத்தின் நடவடிக்கைகள்:**

முன்னிலை : **திரு. இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப.**
**மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி மாவட்டம்**

பங்கு பெற்றோர் : பங்கு பெற்றோர் பட்டியல் இணைப்பு – I ல் இணைக்கப்பட்டுள்ளது

துவக்கமாக, உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், நாகர்கோவில் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களையும், பொதுமக்களையும் வரவேற்றார். தொடர்ந்து, இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் 31.05.2007 தேதியிட்ட கடிதத்தின் படியும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன் படியும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் நெடுஞ்சாலைகள் விரிவாக்கத் திட்டத்தின் 10000 கி.மீ. தே.நெ.மு.தி-நிலைIII திட்ட தொகுப்பு IIன் கீழ் நாகர்கோவில் - காவல்கிணறு (கி.மீ. 0.000 முதல் 16.400) வரையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 47-பி உட்பட தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களிலுள்ள திருவனந்தபுரம் - கன்னியாகுமரி (கி.மீ. 43.000 முதல் 99.000) வரையிலுள்ள தே.நெ.47-னை 4/6 வழிசாலையாக மாற்றுதல் சம்பந்தமாக பொதுமக்கள் கேட்புரை கூட்டமானது 21.08.2009 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் நாஞ்சில் அரங்கம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், நாகர்கோவிலில் நடைபெறுவதாகத் தெரிவித்தார்.

மேலும் இந்த நான்கு மற்றும் ஆறு வழிப்பாதை செயல்திட்டம் சம்பந்தமாக, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின், கன்னியாகுமரி திட்ட செயலாக்கப் பிரிவின் திட்ட இயக்குநர் விளக்க இருப்பதாகவும், தொடர்ந்து பொதுமக்கள் விவரங்களையும், விளக்கங்களையும் தெரிந்து கொள்ளவும் மற்றும் தங்களது கருத்துக்களை கூறவும் அழைக்கப்படுவர் என்றும் தெரிவித்தார். மேலும், பொதுமக்கள் தங்களது கருத்துக்களை கூறத் துவங்கும்போது, தங்களது பெயர் மற்றும் ஊரினை தெளிவாக சொல்லி துவங்கவும் வேண்டுகோள் விடுத்தார். மேலும் தகவல்கள் சொல்கிறபோது பொதுமக்கள் நேரிடையாக தங்கள் கருத்துக்களுக்கு வருமாறும் கேட்டுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து, கன்னியாகுமரி திட்ட செயலாக்கப் பிரிவின் திட்ட இயக்குநரை அமையவுள்ள நான்கு மற்றும் ஆறு வழிச்சாலை பற்றியும், சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு சுருக்கம் பற்றியும் பொதுமக்களுக்கு விளக்குமாறு அழைத்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சுற்றுச் சூழல் அமைச்சகத்தின் விதிமுறைகளில் 3 பாகம் II (அ மற்றும் ஆ)-ன்படி பொதுமக்கள் கேட்புரையில் திட்டம் செயல்படுத்தப்பட்டால் யாரெல்லாம் நேரடியாக பாதிக்கப்படுகிறார்களோ அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களது கருத்துக்களை பதிவு செய்வது மற்றும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுகிறதா என்பதை பொதுமக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களை பதிவு செய்வது மற்றும் அவர்களது கோரிக்கைகளை மனுவாக எழுதித் தருவது குறித்தும் விளக்கமாகக் கூறினார்.

**திரு. P. செல்வகுமார், திட்ட இயக்குநர், திட்ட செயலாக்கப் பிரிவு, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், கன்னியாகுமரி :**

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நம் நாட்டின் சாலை மேம்பாட்டிற்காக பல்வேறு நிலைகளில் செயல்பட்டு வருகிறது, அதன் முதல் கட்டமாக தங்க நாற்கர சாலை திட்டத்தின் கீழ் டில்லி, மும்பை, கல்கத்தா, சென்னை ஆகிய முக்கிய நகரங்களை இணைத்துள்ளது. மேலும் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளையும் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளையும் நான்கு மற்றும் ஆறு வழி சாலைகளாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது உபயோகத்தில் உள்ள திருவனந்தபுரம் கன்னியாகுமரி இருவழி தேசிய நெடுஞ்சாலை NH-47ல் போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமாக உள்ளது. சாலையின் அருகாமையில் நிறைய கட்டிடங்கள் உள்ளன. தற்போதுள்ள தேசிய நெடுஞ்சாலை நாகர்கோவில் காவல்கிணறு NH-47B சாலையும் கூட இருவழி தேசிய நெடுஞ்சாலையே இந்திய தேசிய சாலை அமைப்பின்படி நியமிக்கப்பட்ட வேகமான 100 கி.மீ./ம kmphக்கு இந்த சாலைகள் உகந்ததாக இல்லை என்று தெரிவித்தார்.

தேசிய நெடுஞ்சாலை முன்னேற்றத் திட்டம் - 10000 கி.மீ. நிலை III - திட்டத் தொகுப்பு IIன் கீழ் நாகர்கோவில் - காவல்கிணறு (கி.மீ. 0.000 முதல் 16.400) வரையிலுள்ள தேசிய நெடுஞ்சாலை 47-பி உட்பட தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களிலுள்ள திருவனந்தபுரம் - கன்னியாகுமரி (கி.மீ. 43.000 முதல் 99.000) வரையிலுள்ள தே.நெ.47-னை 4/6 வழிசாலையாக மாற்றுவதற்கு முடிவு செய்யபட்டு மாதிரி செயல் திட்டம் சீகான் லிமிடெட் மூலமாக தயார் செய்யப்பட்டு அரசாங்கத்தின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இந்த திட்டம் செயல்பட்டால் சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்பதை பொது மக்களிடம் கருத்துக் கேட்பதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுச் சூழல் விதிமுறைகளின் படி இந்தக் கூட்டத்தை நடத்துகிறது என்று தெரிவித்தார்.

திட்டமிடப்பட்ட இச்சாலை திருவனந்தபுரத்திற்கு முன்பாகவுள்ள தேசிய நெடுஞ்சாலை 47ல் 552/000 கி.மீ-ல் கழக்கோட்டம் என்ற இடத்திலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இதுவே இத்திட்ட வேலைக்கு தொடக்கப்புள்ளியாக 0/000 கி.மீ ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இப்புதிய சாலை உபயோகத்திலுள்ள திருவனந்தபுரம் மாற்றுசாலை வழியாக 22.600 கி.மீ. வரை நீடித்து கேரள தமிழ்நாடு எல்லையிலுள்ள காரோடு கிராமம் வரை திட்டமிடப்பட்ட 43/000 கி.மீ.ல் கடந்து செல்கிறது. இச்சாலை தமிழ்நாடு வழியாக சென்று இயக்கத்தில் உள்ள NH47ல் 626/187 கி.மீ-ல் இணைகிறது. பின் 627/000 கி.மீ-ல் பிரிந்து சென்று சுங்கான்கடை, நாகர்கோவில், சுசீந்திரம் வழியாக மீண்டும் NH-47 உடன் 624/800 கி.மீல் இணைகிறது. 642/800 கி.மீ லிருந்து 646/238 கி.மீ.வரை இச்சாலை ஏற்கனவே உள்ள சாலையின் வழியையே பின்பற்றுகிறது. அதன்பின் கொட்டாரம் பகுதியில் உள்ள கட்டிடங்களை பாதிக்காமல் செல்வதற்காக வலப்புறமாக பிரிந்து சென்று கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையின் மாற்றுப்பாதையுடன் 231/653 கி.மீல் இணைகிறது என்று திட்ட இயக்குநர் தெரிவித்தார்.

NH-47ன் 82/181 கி.மீ-ல் உள்ள நாகர்கோவில் மாற்றுசாலையும் இயங்கிக் கொண்டிருக்கும் NH-47யும் சந்திக்கும் இடத்திற்கு 600 மீ முன்னதாக உள்ள சாலையை தவிர்த்து, நாகர்கோவில், காவல்கிணறு NH-47ம், NH-7 உடன் இணையும் இடம் வரை புதிய சாலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய சாலை அமையப் பெறுவதற்கு ஏற்கனவே உள்ள சாலையில் 4 கி.மீ. மட்டும் NH-47 சாலையிலும், 0.6 கி.மீ மட்டும் NH-47B சாலையிலும் உபயோகப்படுத்தப்படுகிறது. மீதமுள்ள கி.மீ. முழுவதும் புதிய சாலைகளாக போடுவதற்கு ஏற்றவாறு மாதிரி திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு உள்ளது என்று கூறினார்.

NH-47ல் மாற்றுப்பாதை I மற்றும் NH-47Bல் மாற்றுப்பாதை II ஆகியவை தேர்வு செய்யப்பட காரணங்களையம் திட்ட இயக்குநர் விளக்கமாகத் தெரிவித்தார்.

தற்போது உள்ள சாலை ஓரங்களில் கட்டிட நெருக்கம் அதிகமாக உள்ளது. குழித்துறை, மார்த்தாண்டம், தக்கலை, சுங்கான்கடை, நாகர்கோவில் போன்ற முக்கிய நகரங்கள் மற்றும் கிராமங்கள் தொடர்ந்து உள்ளன. போதிய இடமில்லாத காரணத்தால் விரிவாக்கம் செய்யும் போது சராசரியாக ஒரு கி.மீ.-க்கு 200 முதல் 250 வீடுகள் மற்றும் கடைகள் பாதிக்கப்படுகின்றன என்று தெரிவித்தார்.

NH-47B சாலை ஓரங்களில் அதிக கட்டிட நெருக்கம் அதிகமாக உள்ளது. தேரேகால்புதூர், கிருஷ்ணன்புதூர், விசுவாசபுரம், பண்டாரபுரம், தோவாளை, முத்துநகர், ஆரல்வாய்மொழி, பாரதிநகர், முப்பந்தல் போன்ற முக்கிய நகரங்கள் மற்றும் கிராமங்கள் தொடர்ந்து உள்ளன. குறைவான இடமே உள்ள காரணத்தால் விரிவாக்கம் செய்யும் போது சராசரியாக ஒரு கி.மீக்கு 100 முதல் 150 வீடுகள் மற்றும் கடைகள் பாதிக்கப்படுகின்றன என்று தெரிவித்தார்.

கோவில்கள், பள்ளிவாசல்கள் மற்றும் தேவாலயங்கள் போன்ற மத அடையாள சின்னங்கள் தற்போதைய சாலை ஓரங்களில் அதிக எண்ணிக்கையில் உள்ளன. இதில் பெரும்பான்மையானவை 30 – 50 வருடங்கள் பழமை வாய்ந்தவை. அதை மாற்றி வைப்பது மிகவும் கடினம் என்று தெரிவித்தார்.

சாலை ஓரங்களில் உள்ள கட்டிடங்கள் பெரும்பாலும் வணிகத் தளங்கள் மற்றும் உள்ளுர் மக்களின் வாழ்வாதாரத்தை நேரடியாக பாதிப்பதாக உள்ளன என்று தெரிவித்தார்.

சமூக பொருளாதார ஆய்வின் ஒரு பகுதியான மக்கள் கலந்தாய்வின் போது பெரும்பாலானவர்கள் 30 வருடங்களுக்கு மேலாக அங்கு குடியிருப்பதாகவும், முறையான இழப்பீடு கொடுத்தாலும் அந்த இடங்களை விட்டு செல்வதற்கு விருப்பமில்லாமல் இருப்பதாகவும் அறியப்படுகிறது என்று கூறினார்.

மேற்படி நான்கு வழி சாலை போடப்படுவதால் விவசாய நிலங்கள், வீடுகள், குடிநீர் நிலைகள், குளங்கள், மரங்கள் போன்றவை பாதிக்கப்படுகின்றன. அந்த இழப்பை ஈடு செய்ய ஏதுவாக கீழ்க்கண்ட நடவடிக்கைகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் எடுத்து வருவதாக திட்ட இயக்குநர் தெரிவித்தார்.

1. மரங்கள் - ஒரு மரம் வெட்டப்படுவதாக இருந்தால், மாற்று இடத்தில் இரண்டு மரங்கள் நடப்படும்.
2. வீடுகள், கடைகள், நிலம், - முறையான நஷ்ட ஈடு கொடுத்தல்
3. குளங்கள், நீர் நிலைகள் - பாதிப்பு ஏற்படாத மற்ற குளங்களை முறையாக பராமரித்தல், பாதிக்கப்பட்ட குளங்களின் கொள்ளளவு பாதிக்காத வகையில் ஆழப்படுத்துதல்
4. சுற்றுப்புற காற்று, - அதிக மாசு நிறைந்த இடங்களில் மரங்களை நடுதல்
   சப்தத்தின் தன்மை - வாகனங்களின் பராமரிப்பை அதிகரித்தல்
5. வழிபாட்டுதலங்கள் மாற்றி அமைத்தல் - மாற்றப்படும் இடங்களை முறையாக உருவாக்குதல்

மேற்படி சாலை உருவாக்குவதால் உண்டாகும் சுற்றுச் சூழல் இழப்பை ஈடு செய்யும் பொருட்டு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது. ஏறத்தாழ 5900 குடும்பங்கள் இந்த சாலை போடப்படுவதால் நேரடியாக பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு உரிய நஷ்ட ஈடு முறையாக கொடுக்கப்படும். இந்த சாலை போடுவதற்கு 66 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலமும், 361 ஹெக்டேர் தனியார் நிலங்களும் கையகப்படுத்தப்பட உள்ளன. இந்த சாலை போடுவதால் 558 கட்டிடங்கள் பாதிக்கப்படுகின்றன என்று திட்ட இயக்குநர் தெரிவித்தார்.

**பொது மக்கள் கருத்து:**

**திரு. ஆர். காளிதாசன், சார்ட்டர்டு இன்ஜினியர் :**
சீகான் நிறுவனம் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தால் இந்திய தேசத்தின் பொருளாதாரம் பாதிக்கப்பட உள்ளதாக தெரிவித்தார். 100 கி.மீ. வேகத்தில் வாகனங்களை ஓட்டுவதற்கு ஏற்றதாக சாலைகள் 7 சதவீதம் மேல் முகமும் 3 சதவீதம் சாய்வும் தேவையென தெரிவித்தார். அதற்கு ஏற்றவாறு மாற்ற நிறைய வீடுகளும், நாட்டின் பொருளாதாரமும் பாதிக்கப்படும் என்று கூறினார். அதன்படி குறிப்பாக கி.மீ. 74.600 முதல் 75.200 வரை செயற்கையான முறையில் வளைவுகளுடன் கூடிய சாலைகளை போடுவதற்கு கிட்டத்தட்ட ரூபாய் 10 கோடி பணம் விரயமாகும் என்று குறிப்பிட்டார்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்** மேற்படி சாலை போடுவதால் நேரடியாக யார் பாதிக்கப்படுகிறார்களோ அவர்கள் முதலில் தங்கள் கருத்துக்களை கூறுமாறு அழைத்தார்.

**திரு. புலவர் செல்லப்பா, இரணியல் :**
இந்த நான்கு வழிச்சாலை போடுவதால் விவசாயம் இந்தப் பகுதியில் வெகுவாக பாதிக்கப்படும் என்று தெரிவித்தார். திருவனந்தபுரம் முதல் நாகர்கோவில் வரை நான்கு வழிச்சாலை போடத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில் கி.மீ. 62.000 முதல் 68.000 வரை 6 குளங்கள் பாதிக்கப்படுவதாக தெரிவித்தார். அதன் காரணமாக 600 முதல் 1000 ஏக்கர் நஞ்சை நிலங்கள் பாதிக்கப்படும். ஆகையால் மாற்று பாதை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மேற்படி விதிமுறைகளின்படி இந்த சாலை பணி மேற்கொள்ளப்பட்டால் யாருக்கெல்லாம் பாதிப்பு ஏற்படுகிறதோ அவர்கள் தங்களின் கோரிக்கைகளை மனுவாக எழுதிக் கொடுக்கும்படியும், யாரெல்லாம் நேரடியாக இந்தத்திட்டத்தால் பாதிக்கப்படுகிறார்களோ அவர்களுக்கு தங்களின் கருத்துக்களை கூற வாய்ப்பு கொடுக்க வேண்டி உள்ளது என்றும் தெரிவித்தார். எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டி உள்ளதால் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒருவர் தனது கிராமம் சார்பாக தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

**திரு. வியாகுலமுத்து, கொன்னக்குழிவிளை :**
தான் வசிக்கும் கொன்னக்குழிவிளை மற்றும் பூச்சிக்காடு பகுதியில் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக நிறைய பேர் 5 சென்ட் 10 சென்ட் இடம் வாங்கி புதிதாக வீடு கட்டி குடியேறி இருப்பதாகவும் அந்த பகுதியில் இந்த நான்கு வழிச்சாலை போடுவதாக இருந்தால் இரண்டு ஊர்களிலும் கிட்டத்தட்ட 52 வீடுகள் பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் பொருளாதார வசதி இல்லாதவர்கள் எனவும் தெரிவித்தார். 2002ம் ஆண்டு அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. பெல்லார்மின் மாற்றுப்பாதைக்கு ஏற்பாடு செய்வதாக உறுதி மொழி கூறினார். ஆனால் அது செயல்படுத்தப்படவில்லை. நான்கு வழிச்சாலை

இந்த இடங்களில் வருவதாக இருந்தால் இங்குள்ள வீடுகள் மிகவும் பாதிக்கப்படும். ஆதனால் இந்த இடத்தில் வரும் சாலையை 100 அல்லது 150 அடி வடக்கு பக்கமாக மாற்றி அமைத்தால் இந்த இடத்தில் வசிக்கும் மக்களுக்கு எந்த பாதிப்பும் வராது என்று கூறினார்.

**திரு. ஜெய நேசக்குமார், செயலாளர், லண்டன் மிஷன் சர்ச், பள்ளியாடி :**

லண்டன் மிஷன் சர்ச்சுக்கு 02.09.1998 அன்று மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்யப்பட்டு 02.06.2000 அன்று அனுமதி பெறப்பட்டதாகக் கூறினார். நட்டாலம் பஞ்சாயத்திலிருந்து ஆலயம் கட்ட அனுமதி பெறப்பட்டு சர்வே எண் 1039/17Cல் ஆராதனைக் கூடம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு மார்ச் 2009ல் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதாக கூறினார். இந்த இடத்தில் நான்கு வழிப்பாதை வரப்போவதாக முன்பே சொல்லப்பட்டதால் 23.12.2004 அன்ற இந்த ஆலயத்தின் செயலாளர் அரசு அதிகாரிகளுக்கு இந்த ஆலயத்திற்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாமல் மாற்று வழி அமைக்குமாறு மனுக்கள் அனுப்பி இருக்கிறார். மேலும் இந்த பகுதியில் ஏழை ஜனங்கள் குடியிருப்பதால், இந்த ஆலயம் மற்றும் வீடுகள் பாதிக்காமல் இந்த இடத்தில் மாற்று வழி அமைத்து சாலை அமைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

**திரு. பென்னெட், பள்ளியாடி**

மேற்குறிப்பிட்ட இடங்களில் மூன்று முறை அளவுகள் எடுக்கப்படடதாகவும் கூறினார். முதல் அளவின் போது வீடுகள் எதுவும் பாதிக்கப்படாமலும் இரண்டாவது தடவை அளக்கும் போது 72 வீடுகள் பாதிக்கப்படுவதாகவும் கூறினார். ஒருசில குறிப்பிட்ட நபர்களின் தூண்டுதலினால் இரண்டாவது தடவை அளவு எடுக்கப்பட்டதாக கூறினார். மேற்கண்ட இடங்களில் நிறைய வீடுகள் பாதிக்கப்படுவதால் எந்த வித பாதிப்பும் ஏற்படுத்தாமல் நான்கு வழிச் சாலை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**திரு. சோபிதராஜ், வழக்கறிஞர், முத்தலக்குறிச்சி:**

இந்த நான்கு வழிச்சாலை அமைப்பதற்காக மூன்று முறை அளவுகள் எடுக்கப்பட்டதாகவும் 2006ம் ஆண்டு எடுத்த அளவின் படி குறிப்பாக கி.மீ. 62 முதல் 66 வரையிலான பருத்திக்காட்டுவிளை முதல் இரணியல் வரையிலான 4 கி.மீ. தூரம் 180 டிகிரியில் எடுக்கப்பட்டதாகவும் அதனால் நிறைய பாதிப்புகள் இல்லை என்றும் கூறினார். பின்பு 2007-08 ம் ஆண்டு குறிப்பிட்ட நபர்களின் தூண்டுதலினால் எடுக்கப்பட்ட அளவின்படி மேற்குறிப்பிட்ட இடங்களில் 6 குளங்கள் பாதிக்கப்படுவதாகவும் ஆனால் தேசிய நெடுஞ்சாலை அதிகாரி 3 குளங்கள்தான் பாதிக்கப்படுவதாகவும் கூறினார். இவ்வாறு குளங்கள் பாதிக்கப்பட்டு அந்த இடம் வளைவான சாலையாக உருவாக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் துரிதமாக செல்ல சாலையானது நேரடியாக இருப்பதை விட்டு விட்டு வளைவான பாதையாக போடுவதால் நிறைய இடம் தேவைப்படுவதால் குளங்கள் மற்றும் குடியிருப்புகள் பாதிக்கப்படுவதாகவும் கூறினார். மேலும் இரண்டு தடவைகளிலும் எடுத்த அளவுகளை ‘பொருந்தி ஆய்வு’ செய்து பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாமலும், குளங்கள் அழிக்கப்படாமலும் சாலை அமைக்க கேட்டுக்கொண்டார்.

**திரு. கே. பத்மதாஸ், குமரி மாவட்ட பூமி பாதுகாப்பு இயக்கம்**

திரு சோபிதராஜ் சொன்ன கருத்தையே வலியுறுத்தி பேசியவர் குளங்கள் நீர்நிலைகள் அழிக்கப்பட்டு சாலை போடப்பட்டால் விவசாயிகள் நிறைய பாதிக்கப்படுவார்கள். ஆகையால் முதலில் எடுத்த அளவின்படி நேர்கோட்டில் சாலை அமைக்குமாறும், குளங்களை அழித்து நிறைய இடங்களை கையகப்படுத்தி வளைவான சாலையை தவிர்க்குமாறும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து **மாவட்ட ஆட்சித்தலைவர்** அவர்கள், இக்கூட்டம் நிலம் எடுப்பது தொடர்பானது அல்ல எனவும், ஆகவே பொதுமக்கள் சுற்றுச்சூழல் குறித்த கருத்துக்களை தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

**திரு எம். தர்மராஜ், களியங்காடு**

இங்கு காண்பிக்கப்பட்ட வரைபடத்தில் தோட்டியோடு பக்கத்தில் 0.8 கி.மீ. ஏற்கனவே போடப்பட்டுள்ள சாலையை ஒட்டி வருகிறது. மீண்டும் அந்த சாலை அப்டா மார்க்கெட் பக்கத்தில் வளைவாக வந்து இணைகிறது. இதனால் ஏறத்தாழ 50 - 60 குடியிருப்புகள் தோட்டியோடு பகுதியில் பாதிக்கப்படுகிறது. இதற்கு முன்பு எடுத்த சர்வேபடி பார்த்தால் 10 மீட்டர் குறைந்து நேராக அப்டா மார்க்கெட்டுடன் இணைவதாக இருந்தது. இதனால் நிறைய பாதிப்பு ஏற்படாது. சர்வே எடுத்த சமயத்தில் குறைவாகவே வீடுகள் இருந்தன. ஆனால் தற்சமயம் அரசு நத்தம் புறம்போக்கு சர்வே எண். 35 / 5-ல் நிலங்களில் பட்டாக்கள் பெறப்பட்டு நிறைய வீடுகள் இந்த பகுதியில் உள்ளதால் அரசாங்கம் முன்பு எடுத்த சர்வேபடி சாலையை அமைக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

**திரு எம். பகவதியப்பன், தேரேகால்புதூர் :**

தேரேகால்புதூர், திருப்பதிசாரம், பீமநகரி பகுதி சார்பாக பேச வந்திருப்பதாக குறிப்பிட்டார். தேரேகால் என்ற வாய்க்கால் மூலமாக இந்த பகுதியில் தண்ணீர் இங்குள்ள

கிராமங்களுக்கு கிடைத்து வருகிறது. இந்த நான்கு வழிச்சாலை இந்த தேரேகால் வாய்க்கால் வழியாக போடப்படுவதாக உள்ளது. அவ்வாறு செய்யும்போது தேரேகால் வாய்க்கால் முழுவதும் அழிக்கப்படும் அல்லது அதன் அகலம் குறைக்கப்பட்டு அது ஒரு ஓடையாக மாறிவிடும். இந்த வாய்க்கால் மூலமாக பயன் பெறும் பயிர்நிலங்கள் இதனால் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்படும். அதே போல பீமநகரியிலிருந்து செல்லும் சாலை இறைச்சகுளம் வழியாக சென்று கிழக்கே அப்டா மார்க்கெட்டுடன் இணைகிறது. அதனால் இந்த பகுதியில் இருக்கும் மக்கள் தங்கள் வீடுகள் பாதிக்கப்படுமோ என்ற அச்சத்தில் இருக்கிறார்கள். ஆகையால் எந்த பாதை வழியாக இந்த சாலை போடப்படுகிறது என்ற தெளிவான வரைபடம் தங்களுக்கு தேவைப்படுவதாகவும் தெரிவித்தார்.

**திரு. பொன்னுசாமி, ஆரல்வாய்மொழி**

விவசாயம் செய்வதற்காக நிறைய பணம் செலவு செய்து கிணறு தோண்டி இருப்பதாகவும் இந்த இடத்தில் சாலை வரும்பட்சத்தில் மொத்தமுள்ள 3 ஏக்கரில் 2 ஏக்கர் சாலைக்காக போய்விடுவதால் மீதம் உள்ள ஒரு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யவும் முடியாது. அதனால் கிணறுக்காக நஷ்டஈடு தொகை கூடுதலாக கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு கூறினார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்** அவர்கள் இந்த கருத்தரங்கம் சுற்றுச் சூழல் பாதிப்பு பற்றி நடத்தப்படுவதால் அந்த கருத்தை பற்றி பேசுமாறு கூறினார். மேலும் நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நஷ்டஈடு சம்பந்தமாக மனு எழுதிக் கொடுக்குமாறு கூறினார்.

**திரு. அய்யப்பன், வழக்கறிஞர், கோடியூர் :**

முதலில் சர்வே செய்த போது 5 அல்லது 6 வீடுகள்தான் பாதிப்பதாக இருந்ததாக குறிப்பிட்டார். இரண்டாவது சர்வேயில் ஏறத்தாழ 75 வீடுகள் பாதிப்பதாக கூறினார். சுனாமிக்கு பிறகு இந்த மாவட்டத்தில் ஏகப்பட்ட விவசாய நிலங்கள் காலி மனைகளாக மாற்றப்பட்டு வீடுகளும் நிறைய பேர் இந்த பகுதியில் கட்டி குடியேறி வருகிறார்கள். அதனால் நிலத்தின் மதிப்பு இங்கு அதிகமாக உள்ளது. இந்த இடத்தில் நான்கு வழிச்சாலை போடும் பொழுது ஏகப்பட்ட நீர்நிலைகள், குளங்கள், வீடுகள் பாதிக்கப்படும் என்று கூறினார். முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பொன் இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் இதுகுறித்து மனு கொடுத்ததாகவும் அப்போது திரு பொன் இராதாகிருஷ்ணன் அவர்கள் தாங்கள் வடக்குப்பகுதியில் மலைப்பிரதேசத்தை ஒட்டிதான் இந்த சாலை வரைபடம் தயாரிக்கப்பட்டதாகவும் தற்சமயம் இவ்வாறு இடத்தை மாற்றி இருப்பதாக கூறியதாகவும் சொன்னார். அவ்வாறு மலைப்பகுதியில் இந்த நான்கு வழிச்சாலை வரும் பட்சத்தில் அந்த இடம் பொருளாதார நிலையில் நன்றாக முன்னேறும் என்றும் அந்த பகுதியில் மக்கள் குடியேறுவார்கள் என்றும் தெரிவித்தார்.

**டாக்டர் அருணாசலம், ஓய்வுபெற்ற மருத்துவகல்லூரி கண்காணிப்பாளர் :**

களியங்காடு பகுதியில் சிவன் கோவில் அருகில் வசித்து வருவதாக குறிப்பிட்டார். இந்த கோவிலை ஒட்டி மூன்று முறை அளவுகள் எடுக்கப்பட்டதாக கூறினார். முதல் தடவை கோவிலுக்கு வடக்கு பகுதியிலும் இரண்டாவது முறை ஏற்கனவே உள்ள சாலைக்கும் கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியிலும் மூன்றாவது முறை ஏற்கனவே உள்ள சாலையை விரிவுபடுத்தும இடத்தில் எடுக்கப்பட்டதாக தெரிவித்தார். தற்போது காண்பிக்கப்பட்ட வரைபடத்தில் இந்த சாலை கோவிலை ஒட்டி வருவதால் இந்த கோவிலுக்கு வருகிறவர்களுக்கும், இதை ஒட்டி வசிப்பவர்களுக்கும் இடையூறு ஏற்படும். முதலில் எடுக்கப்பட்ட சர்வே படி கோவிலுக்கு வடக்கு பகுதியில் இந்த சாலை போடப்பட்டால் இந்த கோவிலுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்கும். அவ்வாறு செய்ய முடியவில்லை என்றால் இப்போது போடப்படும் சாலையை சற்று தள்ளி வளைவு வராமல் நேராகப் போட்டால் மேற்படி இடம் பாதிப்பு ஏற்படாது அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**திரு. சூசை மரியான் சமூக சேவகர், அப்பட்டுவிளை, தக்கலை :**

இந்தபகுதியில் நான்குவழிசாலை வருவதற்கு தியாக மனப்பான்மை இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி பேசினார். முதல் சர்வே எடுக்கும் போது கிட்டத்தட்ட 20000 வீடுகள் பாதிக்கப்பட்டதினால் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு இரண்டாவது சர்வே நடத்தப்பட்டதாகவும் இதனால் சில வீடுகளே பாதிக்கப்படுகிறது என்றும் கூறினார். மேலும் பொதுமக்களுக்கு கூடிய வரை இடையூறு வராமல் இந்த நான்கு வழிச்சாலை இந்த பகுதியில் அமைத்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார்.

**டாக்டர் ஆர்.எஸ். லால் மோகன், ஓய்வுபெற்ற மத்திய அரசு ஊழியர் :**

இந்த திட்டத்தின் மூலம் 40 குளங்கள் அழிய இருப்பதாகவும், திட்ட இயக்குநர் 6 பெரிய குளங்களைப்பற்றி மட்டும்தான் தெரிவித்ததாகவும் மீதம் உள்ள 34 குளங்களின் ஆழம், அகலம், பாசன நிலம் முதலிய விவரங்களை தெரிவிக்கவில்லை என்றும் இதனால் சுற்றுச் சூழல் கடுமையாக பாதிக்கப்படும் என்றும் கூறினார். இவ்வாறு குளங்கள்

அழிக்கப்படுவதால் சுமார் 1000க்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் என்று கூறினார். முன்பு 54000 ஹெக்டேர் பரப்பு விளைநிலங்கள் தற்போது 20000 ஹெக்டேராக குறைந்துள்ளது என்றும், முன்பு 3.4 லட்சம் டன்னாக இருந்த விளைச்சல் இப்போது 1.4 லட்சம் டன்னாக குறைந்துள்ளது என்றும் தெரிவித்தார். இவ்வாறு குளங்கள் அழிக்கப்பட்டு இங்கு நான்கு வழிச்சாலை திட்டம் செயல்படுத்தக்கூடாது என்றும் கூறினார். ஏற்கனவே அறிக்கையில் நிலத்தடி நீர் 50 அடியிலிருந்து 100 அடிக்குக் கீழே போய்விட்டது என்று அவர்களே சொல்லி இருக்கிறார்கள். இந்த 40 குளங்கள் அழிக்கப்பட்டால் நிலத்தடி நீர் இன்னும் எவ்வளவு ஆழம் கீழே போகும் என்று அவர்கள் அந்த அறிக்கையில் தெரிவிக்கவில்லை என்றும் கூறினார். மேலும் நமது நாட்டின் பிரதமர் மற்றும் விவசாய அமைச்சர் அவர்கள் நமது நாட்டில் நீர்நிலைகள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர். நிலத்தடிநீர் குறைவு பற்றி அறிக்கையில் குறிப்பிட வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் மரங்களைப் பாதுகாப்பது பற்றியும் சொன்னார்கள். ஆனால் 2006ம் ஆண்டே 50 முதல் 60 மரங்களை வெட்டுவதற்கு காண்ட்ராக்ட் விடப்பட்டதாகவும் இப்போது தான் மக்கள் கருத்துரை கூட்டம் நடத்துவதாகவும் தெரிவித்தார். மக்கள் கருத்துரை முடிந்த பிறகே மரங்கள் வெட்டப்பட வேண்டும், குளங்கள் அழிக்கப்பட வேண்டும் ஆனால் நான்கு ஆண்டுகளுக்கு முன்பே மரங்கள் வெட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டது என்றும் இவ்வாறு மக்களை ஏமாற்றும் விதமாக செய்யக்கூடாது என்றும் நான்கு வழிச் சாலை இந்த பகுதியில் மற்ற எந்த வித பாதிப்பும் இல்லாமல் வருவதற்கு மாவட்ட நிர்வாகம் ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

**திரு பி. ராஜ செல்வின் ராஜ், மார்த்தாண்டம்**

மார்த்தாண்டம் நாகர்கோவிலுக்கு அடுத்தபடியாக பெரிய நகரம் என்றும் தற்போதைய திட்டப்படி நான்கு வழிசாலை மார்த்தாண்டத்தை விட்டு தொலை தூரத்தில் செல்வதால் மார்த்தாண்ட நகர மக்கள் பாதிக்கப்படுவார்கள். குழித்துறையிலிருந்து மேம்பாலம் அமைத்து ஏற்கனவே இருக்கிற சாலையை விரிவு படுத்தினால் நன்றாக இருக்கும் என்று கூறினார்.

**திரு ஆர்.கே. சுந்தரம், மகாதானபுரம்**

இந்த பகுதியில் நான்கு வழிச்சாலை வருவதால் யாருக்கும் எந்த வித பயனும் கிடைக்கப் போவதில்லை என்று கூறினார். கன்னியாகுமரி மாவட்டம் 1600 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட மிகச்சிறிய மாவட்டம் என்றும் பேச்சிபாறை அணை மூலம் இந்த பகுதியில் இரு போக சாகுபடி நடைபெற்று வருவதாகவும், 1967ம் ஆண்டிற்கு முன்னால் குளங்கள் எப்படி பாதுகாக்கப்பட்டு வந்தது என்றும் இப்போது நிலத்தடி தண்ணீர் 100 அடிக்குகீழே போய்விட்டது என்று அறிக்கையில் அவர்களே கொடுத்து இருப்பதாகவும் கூறினார். மேலும் நிலத்தடி நீர் உப்பு நீராக மாறிவிடுமெனவும் தெரிவித்தார். ஏற்கனவே இருக்கிற சாலையை 100 அடி சாலையாக மாற்றினால் போதும் என்றும், விளைநிலங்கள் எல்லாம் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு வருகிறது என்றும் நான்கு வழிச்சாலை இந்த பகுதியில் அமைக்கத்தேவை இல்லை என்றும் கூறினார். தேசிய நெடுஞ்சாலைத் துறையினருக்கு 1956ம் ஆண்டு சட்டப்படி அவர்களுக்கு அபரிமிதமான அதிகாரம் கொடுத்து இருப்பதாகவும் குளங்களை அழிக்காமல் மாற்றுப்பாதையில் சாலை அமைக்க முடியும் என்று தெரிந்தும் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி குளத்தை அழித்து சாலை போடுகிறார்கள். நீதிமன்றத்திற்கு சென்றால் கூட நியாயம் கிடைக்காது. ஏற்கனவே 3 பக்கமும் கடலால் சூழப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலத்தடி நீர் மிகவும் கீழே போய் விட்டதால் இந்த பகுதியில் நான்கு வழிச்சாலை அமைக்கப்பட்டால் மிகவும் பாதிக்கப்படும் என்றும் கடல்நீர் இந்த பகுதிக்கு வந்து எல்லா இடத்திலும் உப்பு நீராக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றும் கூறினார். ஏற்கனவே இருக்கிற குளங்களையும் பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறையும் நன்றாக பராமரிப்பதில்லை என்றும் எல்லா இடமும் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்தார். பெருமளவு விவசாயம் இங்கு நடைபெறவில்லை மேலும் எந்த தொழிற்சாலைகளோ இந்த பகுதியில் இல்லை என்றும் அதனால் இந்த நான்கு வழிச்சாலை இந்த பகுதிக்கு தேவை இல்லை என்றும், ஏற்கனவே இருக்கிற சாலையை 100 அடி சாலையாக மாற்றுவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

**திரு. நாசர், வழக்கறிஞர் :**

வியாபாரத்தை பெருக்கிட இந்த புதிய நான்கு வழிச்சாலை இந்தியாவில் எல்லா இடங்களிலும் போடப்பட்டு வருகிறது. சென்னையிலிருந்து, காவல்கிணறு வரை தேசிய நெடுஞ்சாலையாக போடப்பட்டு இந்த பகுதியில் 40 குளங்களை அழித்து புதிதாக நான்கு வழிச்சாலை வருகிறது என்று கூறினார். ஏற்கனவே இந்த மாவட்டத்தில் மூன்று சாலைகள் இருப்பதாகவும், காவல்கிணறு முதல் நெடுமங்காடு வரை உள்ள சாலை, தேசிய நெடுஞ்சாலை 47 நாகர்கோவில் முதல் திருவனந்தபுரம் வரை உள்ள சாலை, மற்றும் மூன்றாவதாக கொல்கத்தா – காஷ்மீர் இணைக்கும் கடற்கரை சாலை ஆக மொத்தம் மூன்று சாலைகள் இருப்பதாக தெரிவித்தார். ஆகையால் விளைநிலங்களையும் குளங்களையும் அழித்து இந்த பகுதியில் புதிதாக நான்குவழிசாலை அமைக்க வேண்டாம் என்று கூறிய அவர் நாட்டின் முதுகெலும்பாகிய விவசாயத்தால் எந்த நாடு முன்னேறுகிறதோ

அதுவே பிற்காலத்தில் ஒரு வல்லரசாக மாறும் என்றும் தண்ணீர் செழிப்புடன் இருக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக நான்கு வழிசாலை தேவையில்லை என்றும் ஏற்கனவே உள்ள சாலையை விரிவுபடுத்தினால் போதும் என்று கூறினார்.

**திரு. சோபன ராஜ், முன்னாள் கல்லூரி முதல்வர்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 2000ம் ஆண்டு சுற்றுச் சூழல் குறித்து ஆய்வு செய்தததாகவும், அதன்படி முன்பு 5000 குளங்கள் நமக்கு ஆதாரமாக இருந்ததாகவும் இப்போது 2700 ஆக குறைந்துவிட்டது என்றும் இப்போதும் அதைப்பற்றி கவலைப்படாமல் இருப்பதாகவும் தெரிவித்தார். 2001ம் ஆண்டில் மற்றொரு ஆய்வை இந்த மாவட்டத்தில் செய்த போது மக்கள் தொகை கணக்குப்படி ஒரு குளத்தை 582 பேர் உபயோகப்படுத்துவதாகவும் இப்போதுள்ள 40 குளத்தை கணக்கில் எடுக்கும்போது கிட்டத்தட்ட 23000 பேர் பயனடைந்துவருவதாகவும் குறிப்பிட்டார். ஆகையால் 40 குளங்கள் அழிக்கப்பட்டு இந்த பகுதியில் நான்குவழிசாலை வரக்கூடாது என்று கூறினார். இங்கு வசிக்கும் மக்கள் இந்த குளங்களை நம்பியே இருப்பதாலும், மற்ற இடங்களில் இருந்து தண்ணீர் எங்கும் பெற முடியாது என்றும் கூறினார். அவ்வாறு குளங்கள் அழிக்கப்பட்டால் நாட்டின் எதிர்கால சந்ததியினர் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

2004 - ஆம் ஆண்டு ஆய்வுகளின் படி தற்பொழுது வடமேற்கு பருவமழையினால் நீர் பெறப்படுவதாகவும், பெரும்பாலான கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலத்தடி நீர் வளம் குறைவு எனவும், நிலத்தடி நீர் 1.5 மீட்டர் முதல் 6.5 மீட்டர் வரை கீழே போய்விட்டது என்று தெரிவித்தார். ஆகவே விரைவில் வறட்சி வருமெனவும், ஆகவே குளங்களை அழித்தல் கூடாது எனவும் தெரிவித்தார். மேலும் மரங்கள் அழிக்கப்படுவது பற்றி குறிப்பிடும்பொழுது, ஒரு மரத்தை வெட்டினால் அதற்கு பதிலாக 2 மரங்கள் நடுவதற்கு பதிலாக 9 மரங்களை நட வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும் இந்த பகுதியில் காடுகள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டால்தான் மழையளவு அதிகமாகும் என்றும் 6 வகை காடுகளாக இருந்தது இப்போது 24 வகையாக பிரிந்து கொஞ்சம் கொஞ்சமாக காடுகள் அழிந்து வருவதாகவும் எதிர்காலத்தில் சுற்றுச் சூழல் மிகவும் கடுமையாக பாதிக்கப்படும் என்றும் தண்ணீர் தட்டுப்பாடு நிறைய வரும் என்றும் கூறினார். ஆகையால் 40 குளங்கள் அழிக்கப்படாமல் நான்குவழிச்சாலை அமைக்கலாம் என்று வலியுறுத்தினார்.

**திரு. எஸ். ஆர். ஸ்ரீராம், தலைவர், நுகர்வோர் மனித உரிமை கழகம், கன்னியாகுமரி**

நான்கு வழிச்சாலை இந்த பகுதிக்கு மிகவும் தேவை என்றும் ஆனால் 40 குளங்களை எந்த வித பாதிப்பும் ஏற்படாமல் தூண்கள் அமைத்து குளங்களை ஆழப்படுத்தி, கரைகள் ஏற்படுத்தி பிறகு சாலை அமைக்க வேண்டும் என்று கூறினார். உதாரணத்திற்கு மகாதானபுரம் பக்கத்தில் நரிக்குளம் என்ற பகுதியில் தேசிய நெடுஞ்சாலை துறையினர் தூண்கள் அமைத்து குளத்திற்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாமல் சாலை அமைக்க ஏற்பாடு செய்து வருகின்றனர். ஏற்கனவே இருந்த தண்ணீரை விட இப்போது குளத்தை பராமரித்து 30 லட்ச ரூபாய் செலவு செய்து 25% கூடுதலாக தண்ணீரை சேமிக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். அதுபோல் இந்த பகுதியிலும் 40 குளங்களிலும் தூண்கள் அமைத்து நல்ல முறையில் பராமரித்து பிறகு சாலை அமைக்குமாறு கேட்டுக் கொண்டார். மற்ற நாடுகளில் கடல் மேலே பெரிய தூண்கள் அமைக்கப்பட்டு விமான நிலையம் மற்றும் கிராமங்கள் உருவாக்கப்படுவது போல் இந்த பகுதியிலும் எவ்வளவு செலவானாலும் அவ்வாறு தூண்கள் அமைக்க வேண்டும் என்றும் எல்லாம் மக்கள் பணம் என்றும் அதை இந்த காரியத்திற்காக செலவு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும் மாற்றுபாதை அமைக்க வேண்டிய தேவை இல்லை என்றும் நாட்டின் முன்னேற்றத்திற்காக நாம் நமது இடங்களை விட்டுக்கொடுத்தால் தவறு இல்லை என்றும் அதற்கு தகுந்த நஷ்ட ஈடு கொடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

**திரு. நாராயணன் வில்லுக்குறி**

25 வருடங்களுக்கு முன்பாக வில்லுக்குறி பகுதியில் 300 மீட்டர் தெற்குபகுதியில் சாலை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டது. இரண்டாவது முறையாக குதிரைபந்துவிளை, மாடத்தட்டுவிளை வழியாக மற்றொரு சர்வே செய்யப்பட்டது. இப்போது பூச்சிகாடு பகுதி வழியாக புதுக்கிராமம் வரை சாலை வரப்போவதாக சொல்லப்படுகிறது. தங்கள் பகுதிக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் முதலில் எடுத்த சர்வே படி சாலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**திரு. ஜி. அய்யப்பன், பரசேரி, வில்லுக்குறி கிராமம்**

முதலில் எடுத்த சர்வே படி தோட்டியோடு பகுதியில் இடதுபக்கமாக எடுக்கப்பட்டது. தற்போது எடுத்த சர்வேபடி 200 அடி தோட்டியோட்டிலிருந்து தெற்கு பகுதியில் சாலை வருகிறது. இதனால் 50 ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்படுகிறது. அதனால் முதலில் எடுத்த சர்வேபடி நான்கு வழிச்சாலை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**திரு தவசிமுத்து, குன்னத்தூர்**

தான் வசிக்கும் பகுதியில் நான்கு வழிச்சாலை வரப்போகிறது என்ற விவரம் சமீபமாகத்தான் தெரியும் என்றும் அதனால் தனது இடமும் விளைநிலங்களும், மற்றும் அந்த பகுதியில் உள்ள குளமும் பாதிக்கப்படுகிறது என்றும் தான் மிகவும் கஷ்மான சூழ்நிலையில் இருப்பதால் மாற்றுப்பாதை அமைத்தோ அல்லது முன்பு பேசியவர்கள் கூறியது போல் மேம்பாலம் அமைத்தோ தனக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் சாலை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**திரு சி. சுப்பையா, ஆரல்வாய்மொழி**

தேசிய நெடுஞ்சாலை 47பி புதிதாக அமைத்தால் நிறைய விவசாய நிலங்கள் மற்றும் குளங்கள் பாதிக்கப்படும் என்றும் ஏற்கனவே இருக்கிற சாலையில் இருபுறமும் நிறைய காலி இடம் கிடப்பதால் அந்த சாலையையே 100 அடி அல்லது 120 அடி சாலையாகவோ மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்கு மொத்தம் 100கோடி ரூபாய்தான் செலவு ஆகும் என்றும் புதிதாக 47பி சாலை அமைக்க 850 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகவும் அவ்வளவு செலவு செய்து சாலை அமைக்கப்பட்டால் பாதிப்பு ஏற்படுவதாகவும் தாங்கள் இருக்கும் பகுதியில் விவசாயம் கிணற்றுப்பாசனம் மூலம் நல்ல முறையில் நடைபெற்று வருவதாகவும் கூறிய அவர் அரசாங்க குறிப்பாணையில் இந்த இடம் புன்செய் என்று தவறாக குறிப்பிட்டுள்ளதாகவும் நன்செய் என்று மாற்ற வேண்டும் என்றும் அதனால் தனக்கு நஷ்டஈடு குறைவாக கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

**திரு கோபி, வெள்ளமடம்**

நான்கு வழிச்சாலை இந்த பகுதிக்கு கண்டிப்பாக தேவை என்று வலியுறுத்தி பேசினார். இங்குள்ள விளை நிலங்கள் எல்லாம் வீட்டு மனைகளாக மாறி விட்டன என்றும், 46 குளங்களை சுற்றிலும் வீடுகளே உள்ளன என்றும் குளங்களில் உள்ள நீரை யாரும் பயன்படுத்துவதில்லை என்றும் இந்த பகுதியில் நான்கு வழிசாலை கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

**திரு நாராயணன், தலைவர், இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் அறக்கட்டளை, வில்லுக்குறி:**

சுற்றுச் சூழல் தாக்கம் குறித்து பேச வந்ததாக குறிப்பிட்ட அவர், தற்போதுள்ள நிலையில் ஆரோக்கியமான காற்று, தண்ணீர் தேவை பற்றி விளக்கி கூறினார். தற்போது நான்கு வழிசாலை போடுவதால் இழக்கப்படும் குளங்கள் மற்றும் மரங்கள் பின்பு பராமரிப்பு செய்யப்படும் மரங்கள் மீண்டும் நடப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்ததாகவும் அதற்கான நிதி எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரமும் தெரிவிக்கப்பட வேண்டும் என்று கூறினார். ஏற்கனவே போடப்பட்ட நான்கு வழிச்சாலை பகுதிகளில் இந்த திட்டம் முழுமையாக செயல்படுகிறதா அதற்கான திட்டம் குறித்தும் விளக்கம் தேவைப்படுவதாக தெரிவித்தார். அவ்வாறு செய்யப்படவில்லை என்றால் இந்த கூட்டம் வெறும் கண்துடைப்பு என்றே கருதவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதற்கிடையில் 18.8.09 அன்று தினத்தந்தி நாளிதழில் தேசிய நெடுஞ்சாலை துறையினரால் வெளியிடப்பட்ட ஒப்பந்த புள்ளி குறித்து மார்த்தாண்டம் வர்த்தக சங்கம் சார்பாக விளக்கம் கேட்கப்பட்டது. அதற்கு **திட்ட இயக்குநர்** கால தாமத்ததை தவிர்க்கவே இந்த சாலை வேலை செய்வதற்கு யாரெல்லாம் விருப்பப்படுவார்கள் என்பதை தெரிந்து கொள்ளவே இந்த விளம்பரம் கொடுக்கப்பட்டதாக தெரிவித்தார். மேலும், வெளியிடப்பட்டுள்ள விளம்பரம் மத்திய அரசின் நெடுஞ்சாலை துறியனால் வெளியிடப்பட்டுள்ளது எனவும், ஆதலால் இக்கூட்டம் சுற்றுச்சூழல் துறை அளிக்க வேண்டிய ஒப்புதலுக்காக நடத்தப்படுகின்றது எனவும், இரண்டு துறைகளும் வெவ்வேறானவை எனவும் தெரிவித்தார். இதனை ஒப்புக்கொள்ளாத வியாபார சங்க உறுப்பினர்கள் இது ஒரு கண்துடைப்பு கூட்டமே என்று விவாதித்தனர். மேலும் **திட்ட இயக்குநர்** ஏற்கெனவே மரங்கள் வெட்டப்படுவதற்கு வெளியிடப்பட்ட ஆணையானது மாநில அரசின் நெடுஞ்சாலை துறையால் வெளியிடப்பட்டுள்ளது எனவும், அது குறித்து தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்திற்கு தொடர்பில்லை எனவும் தெரிவித்தார்.

**மாவட்ட வருவாய் அலுவலர்** அவர்கள் எந்தவொரு செயல்திட்டத்திற்கும் இதுபோன்று செயல்முறைகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட வேண்டிய அவசியத்தைப்பற்றி விளக்கிக் கூறினார். மேலும் இந்த கூட்டம் மூலம் மக்களின் உணர்வுகளை பதிவு செய்தும் அதனை மேலிடத்திற்கு தெரிவித்து பிறகு நல்ல முடிவு எடுக்கப்படும் என்று விளக்கம் அளித்தார். அதற்கு இந்த கூட்டத்திலுள்ள மக்களின் எண்ணப்படி மாற்றுப்பாதை அமைக்கப்படுமா என்று விளக்கம் கேட்டனர். அரசாங்க விதிமுறைப்படி இந்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் பெரும்பான்மையான மக்களுக்கு இடையூறு ஏற்படாமலும் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் பதில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் திரு சுந்தரம், மகாதானபுரம் அவர்கள் பாதிப்புகள் நிறைய உள்ளதால் இத்திட்டம் தேவையில்லை, இருவழிச்சாலையே போதுமானது எனவும் குறிப்பிட்டார். மேலும்,

திரு. நாராயணன், வில்லுக்குறி அவர்கள் நான்கு வழிச்சாலை திட்டம் தேவையெனவும், ஆனால் சுற்றுச்சூழலுக்கு ஒதுக்கியுள்ள ரூ.5 கோடி போதுமானது அல்ல எனவும் தெரிவித்தார். மேலும், திரு சொக்கலிங்கம், ஆரல்வாய்மொழி அவர்ள் இடம் எடுப்பது தொடர்பாக நஷ்ட ஈடு தவிர, வேலை வாய்ப்பும் குடும்பத்திற்கு அளிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து, உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாகர்கோவில் அவர்கள் இக்கூட்டத்தில் கூறப்பட்ட கருத்துக்களை தொகுத்து அளித்தார்.

டாக்டர் ஜஸ்டின் என்பவர் பேசும் பொழுது தனது நிலம் கையகப்படுத்தப்படுவதால் பொதுவாக ஏழைமக்களுக்கு நஷ்டஈடு குறைவாக கிடைக்கும் என்றும் சந்தை நிலவரப்படி உரிய நஷ்டஈடு தர வேண்டுமெனவும் வேண்டினார்.

மூன்றடைப்பிலிருந்து பேச வந்தவர் களியக்காவிளையில் நிலம் இருப்பதாகவும் தனக்கு நஷ்டஈடு தரப்படும பொழுது தற்போதைய மார்க்கெட் நிலவரப்படி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்கு பதில் அளித்த மாவட்ட ஆட்சித்தலைவர் எல்லோருமே நிலம் வாங்கும் பொழுது பத்திர செலவை குறைப்பதற்காக நிலமதிப்பை குறைத்துப் போடுவதால் இந்த நிலைமை வருகிறது என்று குறிப்பிட்டார்.

**கருத்து சுருக்கம் :**

பொதுவாக குளங்களை அழிக்காமலும் சுற்றுச் சூழல் பாதிக்கப்படாமலும் நேரடியாக பாதிக்கப்படும் மக்களுக்கு அவர்களுக்கு தேவையான நஷ்டஈடு மற்றும் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. குளங்கள் இருக்கும் பகுதிகளில் தூண்கள் அமைத்து மேம்பாலம் அமைத்து சாலை அமைக்கலாம் என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

இணைப்பு – I - பங்குபெற்ற பொதுமக்கள் விபரம்
இணைப்பு – II - எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள்
(53 எண்ணிக்கைகள் - 722 பக்கங்கள்)

உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
நாகர்கோவில்

மாவட்ட ஆட்சியர்
கன்னியாகுமரி மாவட்டம்
நாகர்கோவில்